RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1337

# நாலடியாரில் தனிமனித கோட்பாடு

**பா. கவிதா [அ, *]**

[அ] தமிழாய்வுத்துறை, காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620018, தமிழ்நாடு, இந்தியா.

# Naladiyar's Individualism Theory

**B. Kavitha [a, *]**

[a] Department of Tamil, Cauvery College for Women (Autonomous), Tiruchirappalli-620018, Tamil Nadu, India

* Corresponding Author:
drkavithatamil@gmail.com

Received: 20-06-2022
Revised: 25-08-2022
Accepted: 16-09-2022
Published: 21-11-2022

Check for updates

**ABSTRACT**

Literature is a book that expresses the greatness of society. Ethics have been stated with the intention of instructing. In Naladiyar the characteristics of the individual are explained in detail. It has been advised to live in the public interest without selfishness. It has been taught to live with the ethics of the elderly. Education is necessary for a man to live in society by analyzing the principles of having patience in actions and living with maturity, the depth of friendship to live in companionship, and the virtue of living in harmony and harmony during the course of his life. The merits of education have also been mentioned. Naladiyar is a book of justice belonging to the genre of pathinenkilkanakku. It is made up of venpas with four lines. It is a collection of 400 individual songs composed by Jain sages and is known as Naladi Nanooru and Agricultural Veda. Naladiyar is unique in using the simple meaning of life as a parable and imparting justice.

**Keywords:** Naladiyar, Parable, Venpa, Society.

## முன்னுரை

நாலடியார் பதினெண் கீழ்க்கணக்கு நூல் வகையைச் சார்ந்த நீதி நூலாகும். இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது. சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகும். இதை நாலடி நானூறு என்றும் வேளாண் வேதம் என்றும் வழங்குவர். வாழ்க்கையின் எளிமையான பொருளை உவமையாக கையாண்டு நீதி புகட்டுவதில் நாலடியார் தனித்துவம் பெற்று விளங்குகின்றது. ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி நாலடி நானூறும் நன்கு இனிது பழகுதமிழ் சொல்லருமை நாள் இரண்டில் என்னும் கூற்றுக்கள் திருக்குறளுக்கு இணையாக நாலடியாரை போற்றுவதை உறுதிசெய்கின்றன.

சமூகத்தின் சிறப்பை வெளிப்படுத்தும் நூல்கள் இலக்கியங்கள் அறநெறிகளை அறிவுறுத்தும் வண்ணம் படைக்கப்பட்டன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அறம் உரைக்கும் நூல்கள் பதினொன்று அவற்றுள். அற நெறிகளை நோக்கமாகக் கொண்டு நாலடியார் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் மனித வாழ்க்கைக்குரிய நெறிமுறைகளையும் வாழ்வியல் கூறுகளையும் எடுத்தியம்புகின்றது திருக்குறளைப் போன்று அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என மூன்று பால்களும் விளங்குகின்றன.

நிலையில்லா உலகில் ஆசை கொள்ளாது ஈகை கொண்டு வாழ வேண்டும் என்ற பொதுமை கருத்தை சுட்டுகிறது. தனி மனித ஒழுக்க நெறிகளை இனம் காட்டுகிறது. மனிதன் நெறியுடன் வாழ கல்வியில் சிறந்து அறிவு பெற்று அன்பு கொண்டு வாழ வேண்டும் என்ற சீரிய சிந்தனைகளையும்

நடுநிலையாக நின்று ஒழுக்கமுடன் வாழவேண்டும் என்ற வாழ்வியல் நெறிகளையும் எடுத்தியம்புகின்றன.

அறத்தின் சிறப்பையும் அன்பின் ஆழத்தையும் நட்பின் வகைகளையும் தனிமனிதனின் வாழ்க்கை நெறிகளை எடுத்துரைக்கும் நோக்கில் நீதி நூல்கள் தோன்றின நாலடியில் இன்புறும் நோக்கை விட அறிவுறுத்தும் போக்கு மிகுதியாக இடம் பெற்றுள்ளன நிலையில்லா வாழ்க்கையில் உயிர் உள்ளபோதே அறம் செய்திட வேண்டும் என்ற அறக் கோட்பாட்டை முன்வைத்து எழுதப்பட்டது. நாலடியார் தனி மனித ஒழுக்க நெறிகளை சுட்டி செல்லகிறது சமூக நெறியுடன் வாழ தனி மனிதனுக்கு கல்வி அவசியம் என்பதை தெளிவாக உரைத்துள்ளது.

"நாலடியாரின் காலத்தை கருத்துக்களின் அடிப்படையில் கிபி ஏழாம் நூற்றாண்டு என்றும் ஆய்வாளர்களின் கருத்துக்களின் அடிப்படையில் கிபி ஐந்தாம் நூற்றாண்டு என்றும் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. முத்தரையர் என்பவர்கள் குறுநில மன்னர் மரபைச் சேர்ந்தவர்கள் இம்மரபினர் கிபி ஏழாம் நூற்றாண்டு முதல் சிறந்தவர்களாகவும் கொடையாளிகள் ஆகவும் வாழ்ந்தனர் என்பது வரலாறு. இவைகளை பற்றி குறிப்பிடும் நாலடியார் கிபிஏழாம் நூற்றாண்டில் தோன்றியதாக இருக்க வேண்டும்" (Iraiyarasan, 1977).

## அறம்-பொருள்

அறம் என்ற சொல் விரிந்த பொருளுடையது மனிதன் புரியும் நற்செயல்கள் அனைத்தையும் உள்ளடக்கிக் கூறலாம். தமிழரின் அக வாழ்க்கையிலும் புற வாழ்க்கையிலும் அறம், கடைப்பிடிக்கப்படுவதை தமிழ் இலக்கியங்கள் குறிப்பாகவும் தெளிவாகவும் புலப்படுத்தியுள்ளன.

மனித வாழ்க்கையில் இரண்டறக் கலந்துள்ளஉறுதிப் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இந்நாகனுள் முதன்மை பெறுவது அறம். இதனை நன்னூல்

"அறப்பொரு ளின்பம்வீடடைதனூற்பயனே"

அறம் என்ற சொல் நீதியை குறிக்கும். அதற்கு மேலும் பல பொருள்களைத் தரும் என்பதனை நாளைய சொற் பொருளில் வழங்கப்படுகிறது கருத்து பொருள் இப்படி பல வகையில் இருந்தாலும் அவை எல்லாவற்றுக்கும் அடிப்படையாக உள்ள அதன் சொற்பொருள் அற்றது என்பதாகும். அது பற்றற்றநிலை தன்னலமற்ற தாய்மை நுட்பமும் ஆற்றலும் கொண்ட சுற்றிலையே உண்மை என வழங்கலாம். உண்மை என்றும்நேர்மை என்றும் குணம் என்றும் நல்லூழ்என்றும் கடமை என்றும் பிறவாறும் கருதலாம். ஆகவே தொல்லாசிரியர்கள் அறம் என்பதை பல்வேறு கருத்துக்களிலும் ஆள்வர் (Subbu Reddyar, 1988).

## அறம் உணர்த்தல்

உலகில் தோன்றிய உயிரினங்களில் பகுத்தறிந்து வாழும் இனம் மனித இனம். மனிதன் கண்ட விஞ்ஞானம் மெய்மை உண்மை போன்றவற்றை அறிஞர்கள் தத்துவம் என்று பெயரிட்டு அழைக்கின்றனர். தத்துவம் என்பது உண்மை நிலையை தெரிந்து கொள்ளும் இயல்பு என்றும் உண்மையை உரைப்பது என்றும் அழைக்கப்படும்.

"அறம் என்னும் சொல்லிற்கு தமிழில் எட்டு வகையானபொருள்கள் வழங்கி வருகின்றன. பொதுவாக அது நற்பண்பு அல்லது நல்லொழுக்கம் என்னும் பொருளில் தமிழ் இலக்கியங்களில் வழங்கப்பட்டிருப்பதை அடையலாம் ஒழக்கம் நீதி கடமை ஈகை அறக்கடவுள் புண்ணியம் சமயம் போன்ற பொருள்களிலும் வழங்கி வருகிறது" (Thirunavukkarasar, 1977).

இவ்வுலகில் வாழும் மனிதன் யாக்கை நிலையானது. நூறு வயது வரை வாழ முடியும் என்று எண்ணி தான் வாழும் ஒவ்வொரு நாட்களையும் பயனின்றி நாளை என்று நினைத்து அறம் செய்யாது நன்மை புரியாது புகழ் தம்முடன்நிலைத்தது என்று எண்ணிவாழ்கின்றனர். இவ்வுடம்பு என்றாவது

இழக்க நேரிடும், இது நிலையற்றது என்பதை சமணமுனிவர்கள் மிகத் தெளிவாக விளம்பியுள்ளனர். உலகில் உயிரோடு வாழும்போதே விரைந்துஅறம் செய்தல் வேண்டும். இதனை

"மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்

தலைமிசைக் கொண்ட குடையர் - நிலமிசைத்

துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட்ட டாரல்லால்

எஞ்சினார் இவ்வுலகத் தில்"

பிறருக்கு அறம் செய்து வாழ்தல் சிறப்பானது (Gowmareeswari, 2010). இந்த உடம்பு புள்ளின்முனையில் இருக்கும் நீர் துளியை போல நிலையில்லாதது. மன்னாதி மன்னர்கள் உயிரும் ஓர் நாள் அழியக்கூடியது. மலையின் மீது காணப்படும் சந்திரன் போல யானையின் மீது வரும் அரசர்களும் இறந்து விடுவர் என்ற நிலையாமை கோட்பாட்டினை உணர்த்தி உடலோடு உயிர் உள்ளபோது அறம் செய்தல் வேண்டும் என்ற அறச்சிந்தனையை விளம்புகிறது.

## பெரியோர் இனம் சேர்தல்

உலகில் பல காரண காரியங்கள் உண்டு அவை அனைத்தையும் செய்ய அனுபவம் தேவை. பெரியோர் அனுபவம் பெறுவதற்கு முன்னோர்களின் வழிகாட்டல் மிக அவசியமானது. பெரியோர் துணை இனம் காண்பது மிகவும் கடினம். பெரியோரின்பண்பெனப்படுவது. மற்றவர்களுக்கு துன்பம் எனில் தமக்கு வந்தார் போல் எண்ணி துன்பத்தை நீக்குவர். பிறர் தவறு செய்தாலும் தம் உருபுகள் வருத்தம் அடைந்தது போல எண்ணிஅச்செயலை மறக்கச் செய்யவர்.

இச்சமூகத்தில் என்ன செய்கிறோம் என்பதை அறியாது ஒழுக்கமில்லாது வாழ்கின்றனர். தவறான செயல் செய்து நிறைந்த பாவங்களை செய்கின்றனர். செய்த தீவினையை எவ்வாறு அகற்றுவது என அறியாது வாழ்கின்றனர். ஒழுக்க நெறிகளை தன் கண் என நினைத்து வாழும் பெரியோரின் வழிகாட்டல் இருந்தால் தீய நெறிகள் அகன்று நன்மை பெறுவர்.

புல்லின் மீது படர்ந்த பனித்துளி வெப்பம் கண்டவுடன் மறைவது போல பெரியோரை சேர்ந்து வாழ்ந்தால் பாவம் அனைத்தும் அகன்றுவிடும். துன்பங்கள் நீங்கி இன்பம் அடைவர்.

ஊருக்கு நடுவில் உள்ள நீர் ஆற்று நீரை அடைவதால் தண்ணீருக்கு தீர்த்தம் என்று பெயர் அதுபோல மாட்சிமை இல்லாத நிலத்தில் பிறந்தாலும் மாட்சிமை பொருந்திய பெரியோரை சேர்வதால் உயர்ந்த குலமாக எண்ணி வழி நடத்துவதை,

"ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்

பேரும் பிறிதாகித் தீர்த்தமாம் - ஓருங்

குலமாட்சி யில்லாரும் குன்றுபோல் நிற்பர்

நலமாட்சி நல்லாரைச் சார்ந்து."

என எடுத்துரைக்கிறது (Gowmareeswari, 2010).

நாலடியாரின் கூற்றினை மெய்பிக்கும் வண்ணம் திருக்குறளும் பெரியோரின் நட்பு குறித்து சுட்டு கையில்கடிந்து அறிவுரைக் கூறும் பெரியாரின் துணை கொண்டு வாழ்பவர்களை கெடுக்கும் ஆற்றல் இவ்வுலகில் யாருக்கும் இல்லை. மனிதன் பெரியோரை துணை கொண்டு வாழ்பவர்களின் வாழ்க்கையில் துன்பம் உண்டாகாது என்பதை,

"இழக்கும் துனணயாரை ஆள்வாரே யாரே

கெடுக்கும் தகைமை யவர்"

மனிதன் பெரியோருடன் இனணந்து அவர்களுடைய வார்த்தைகளுக்கு மதிப்பளித்து தன் தவறுகளை உணர்ந்து. நல்எண்ணத்துடன் செயல்பட்டால் நன்மை வாழ்வு உண்டாகும் நல்ல நிலத்தில் நெல் பயிரிட்டால் நிறைந்து வளர்வது போல் எல்லாருடன் இணைந்து வாழ்ந்தால் நன்மை உண்டாகும் (Mathivanan, 1978).

## பொறுத்தல்

மற்றவர் துன்பத்தை தன் துன்பம் போல் நினைத்து வாழ்தல் வேண்டும். மற்றவர் துன்பத்தை நினைத்ததால் போதிமரம் தோன்றியது மகாவீரர் புத்தர் போன்றவர்களின் சிந்தனையில் தோன்றிய எண்ணங்கள் போதனைகளாக வந்தவன தன்னை இகழ்ந்து பேசியவர்களை இயேசுவைப் போல் மன்னிக்க வேண்டும். பெரியோர்களின் குணமே பொறுமை இதனை நினைந்து கோபம் கொள்ளாது வாழ்வில் வெற்றி பெறுவதற்கான ஆயுதம் பொறுமை என்பதை எண்ணி வாழ வேண்டும். ஒருவர் மற்றவரிடத்து செலுத்தும் அன்பு வாழ்வில் உயர்த்தும் படிகற்களாகும்.

சினத்துடன் இருக்கும் நாய் ஒன்று கடித்து விட்டது என்பதற்காக யாரும் நாயை திருப்பிக் கடிக்க மாட்டார்கள் இவ்வுலகத்தில் இப்படி ஒரு வழக்கு இதுவரை இருந்ததில்லை.

நாலடியார் உவமையின் கீழ்மக்கள் தகுதி பார்க்காது இழிச்சொல் பேசினாலும் அறிவுடைய சான்றோர் கோபம் கொள்ளாது. பதில் உரைக்காதுபொறுமை காக்கும் அறத்தை

“கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்

பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை - நீர்த்தன்றிக்

கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ

மேன்மக்கள் தம்வாயால் மீட்டு”

இப்பாடல் வாயிலாக அறிய முடிகிறது (Gowmareeswari, 2010).

## இளைய தலைமுறையினர்

எந்த செயல் செய்தாலும் அதன் ஏற்ற தாழ்வுகளை உணர்ந்து தக்க சமயத்தில் தன் செயல்களை செய்ய வேண்டும். அவற்றில் தொய்வு கொண்டாலும் உடனே தீர்வு கொள்ளாது பொறுமை காத்து செயல் பட்டால் வெற்றி நிச்சயம்.

## நட்பு

நட்புக் கொள்வதற்கு தொடர்பும் பழக்கமும் அவசியமில்லை ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுத்துவதற்கு காரணமாக அமையும். சிறந்த நட்புக்கு இலக்கணமாக விளங்கியவர் அதியமான் அவ்வையார் கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் போன்றோரைக் குறிப்பிடலாம் நட்பு கொள்வதற்கு முன்னால் அவர் நல்லவரா இகெட்டவரா என்று ஆராய்ந்து பிறகு நட்பு கொள்ள வேண்டும். இருவருடைய நட்பு என்பது பொறுமையில் வளர்வது நண்பர்கள் தீமை செய்தாலும் பொறுத்துக் கொள்வதே சிறந்த நட்பின் அடையாளமாகும்.

நட்பை நாலடியார் மூன்று பகுதிகளாக வகுத்துள்ளது. கடையாயர்நட்பு நாள்தோறும் நீர் பாய்ச்சி பராமரித்தால் உதவும் பாக்குமரத்தை போன்றவர்கள். இவர்கள் நாள்தோறும் உதவி செய்தால்பயன்படுவர். இடையாயர் நட்பு விட்டுவிட்டு நீர்பாய்ச்சி கவனித்து வந்தால் உதவும் தென்னை மரத்தை போன்றவர்கள் உதவி செய்தால் மட்டுமே இவர்கள் பயன்படுவர் தலையாயர் நட்பு விதையிட்ட நாளில் வார்த்த நீரின்றி பிறகு பராமரிப்பு செய்யாமலே உதவும் பனை மரத்தைப் போன்றவர் இவர்கள் மதிப்பு மிக்கவர்கள். நட்பின் அறத்தை

“கடையாயார் நட்பிற் கமுகனையார் ஏனை

இடையாயார் தெங்கின் அனையர் - தலையாயார்

எண்ணரும் பெண்ணைபோன்று இட்டஞான்று இட்டதேஇ

தொன்மை யுடையார் தொடர்பு”

என விளம்புகிறது. தகுதியுடையவரின்நட்பு இனிமை பயப்பதாகும். ஒருவருடன் நட்புக் கொள்வதற்கு முன் அவர்தம் எண்ணத்திற்கும் இசெயலுக்கும் ஏற்புடையவரா என்று தெளிவு கொண்டு நட்பு கொள்ளவேண்டும் (Gowmareeswari, 2010). மத இனம் குலம் இவற்றை எண்ணி நட்பு செய்யக்கூடாது. மனதில் உண்மையான நட்பு வளர்ச்சிக்கு படிநிலை. மனத்தூய்மை நட்பிற்கு தேவை. எந்த குலத்தைச் சார்ந்தவராக இருப்பினும் நட்புக் கொள்ள வேண்டும். அறிவு உடையவரிடம் கொண்ட நட்பு தேவர் வாழும் தேவலோகத்திற்கு இணையாகும். பகுத்து பார்க்கும் பக்குவம் இல்லாத நட்பு பாவம் செய்துவிட்டு செல்லும் நரகத்திற்கு இணையாகும். நண்பர்கள் தவறு செய்தால் அவர்களது தவறை உணர்த்தி வாழ்வது நேர்மையான நட்பிற்கு வேர்களாக அமைகிறது.

## ஈதல்

மனிதன் தன்னைக் காத்துக் கொள்வது தன்னலம் பிறரை தன்னைப்போல் நேசிக்க வேண்டும். நேசிக்கும் பண்பு இல்லாதவர் இவ்வுலகில் வாழ்ந்து பயனில்லைஅறம் செய்யாதவர்கள் கடை நிலையை அடைவர். இவ்வுலகில் நிலையானது எதுவும் இல்லை. வாழும் காலத்தில் பொருளை சேர்த்து வைத்து வாழ்வது சிறப்பில்லை பிறருக்கு கொடுத்து வாழ்வது சிறப்பு. உள்ள பொருளை பிறருக்கு கொடுக்க வேண்டும் இணைந்து வாழ வேண்டும். மனதில் வெறுப்புணர்வை அகற்ற வேண்டும் பொருள் செல்வம் இவையாவும் நிலையில்லாதது. இவற்றை எண்ணி வாழ்வது தவறு. மனிதன் மற்றவருக்கு கொடுத்து தானும் உண்ண வேண்டும். தன்னை அடைந்தவரை கண்டு அச்சம் கவலை சோர்வு கொள்ளாது. முகமலர்ந்து ஈதல்வேண்டும்.

நிறைந்த செல்வம் இருக்கிறது என்ற பெருமையில் அடுத்தவரை தரக்குறைவாக நினைக்கும் எண்ணம் மனிதனை பாழ் படுத்துகிறது. எத்தகைய செல்வம் இருந்தாலும் செல்வத்தை மட்டுமே நம்பி நாளை என்ன நடக்கும் என்பதை உணராமல் வாழ்பவர்களின் வாழ்க்கை இருளில் தோன்றி மறையும் மின்னலைப் போன்றது. செல்வமும் வாழ்க்கையில் இருப்பதுபோல் இருந்து மறைந்து விடும் ஆகவே இருக்கும் போது மற்றவர்களுக்கு கொடுத்து தானும் அனுபவித்து வாழும் வாழ்க்கையே சிறப்புடையதாகும் இதனை

“செல்வர் யாம்!' என்று தாம் செல்வுழி எண்ணாத

புல்லறிவாளர் பெருஞ் செல்வம்இ எல்லில்

கருங் கொண்மூ வாய் திறந்த மின்னுப்போல் தோன்றி

மருங்கு அறக் கெட்டுவிடும்.

என இவ்வடிகள் சுட்டுகிறது (Gowmareeswari, 2010).

இக்கருத்தை வலியுறுத்தும் வண்ணம்

சாதலின் இன்னாதது இல்லை இதுவும் ஈதல் இயையாக் கடை

பலரோடு பகிர்ந்து உண்ணும் ஒருவனுக்கு பசி என்ற நோய் நெருங்காது” (Mathivanan, 1978).

இல்லை என்று யாசி போருக்கு பொருள் கொடுத்து உதவ முடியாத வறுமையுற்ற காலத்தும் மற்றவர்களுக்கு கொடுத்து வாழ வேண்டுமென்ற நாலடி கருத்து ஒப்பு நோக்கத்தக்கது.

தக்க சமயத்தில் செய்யப்படும் உதவிக்கு அளவே கிடையாது ஆலமரத்தின் விதை அளவில் சிறியது. ஆனால் மண்ணில் விழுந்து முளைத்த மரம் பலநூறு பேர் தங்குவதற்கு இடமும் வெப்ப

கொடுமையில் இருந்துமீள்வதற்கு நிழலும் தருகிறது. இதைப் போலத்தான் நாம் செய்யும் உதவி சிறியதாக இருந்தாலும் பயனை நினைத்துப் பார்க்கும்போது அது வானை விட உயர்ந்தது. போன்று தோன்றும்.

புல்லரிசி ஆவது பிறருக்கு கொடுக்க வேண்டும் அத்தகைய வாழ்வு சிறப்புடையது. யாவருக்கும் பகுத்துண்டு வாழ்வது சிறப்பு என்பதனை

"மாசித் திங்கள் மாசின சின்னத் துணி முள்ளின்

ஊசித் துன்னம் மூசிய ஆடை உடை ஆகப்

பேசிப் பாவாய் பிச்சை எனக் கை அகல் ஏந்திக்

கூசிக் கூசி நிற்பர் கொடுத்து உண்டு அறியாதார்

சீவக சிந்தாமணி பாடல் பாடல் வழி ஒப்பு நோக்கத்தக்கது" (Subbu Reddyar, 1988).

## சமூகம்

பரந்த நிலப்பரப்பில் ஒன்றுகூடி வாழும் மக்கள் இனம் என வழங்கப்படும். இன்னும் கார்ப்பரேட் என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து சமூகம் என்ற சொல் பெறப்பட்டது. மற்றவர்களுடன் தோழமையோடு அல்லது ஓரினமாக வாழுதல் என்பது அதன் பொருள். சமுதாயம் என்பதை ஒரே சொல்லில் வரையறுக்கவேண்டுமானால் ஒழுங்குடன் இருப்பது என்பதாகும். ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்காகவும் ஒழுங்குடன் வாழ்வதற்காகவும் தோற்றுவிக்கப்பட்ட கட்டமைப்பாகும்.

"சமுதாயம் என்பது தனிப்பட்ட மனிதர் பலரை தன்னகத்தே கொண்டது. அமைப்பாகும். அந்த சமுதாயத்தின் வாழ்வும் இதாழ்வும் ஏற்றமும் இறக்கமும் தனிமனிதரின் பண்பையும்இ ஒழுக்கத்தையும் பொருத்தே அமையும். தனிமனிதன் நல்லவனாக வல்லவனாக பண்பும் ஒழுக்கமும் நிறைந்தவனாக எந்த சமுதாயமும் சிறப்புற்று இயங்குவதில்லை அதை அறிந்த அறநூல்கள் நமக்கு தனி மனிதன் ஒழுக வேண்டிய பண்பு குறித்து கூறுகிறது" (Chandrasekaran, 2008).

## கல்வி

கல்வியின் நோக்கம் ஒழுக்கம் என்ற விவேகானந்தரின் பொன்மொழிகள் ஏற்ப நூல்களைக் கற்றாலும் கற்றறிந்தவற்றை கூறுவனவற்றை கேட்டாலும் ஆகும். கல்வி கேள்விகளால் பெறுவது, அறிவால் ஒருவன் தனக்கும் தன்னைச் சேர்ந்த இருக்கும் இறுதிவரைக்கும் காத்துக்கொள்ளும் பலன்கள் கீழ் நோக்கிச் செல்லாமல் ஒழுக்கமுடைய உயர்ந்து வருடம் சேர்வதால் கல்வி அறிவின் பயன் நமக்கு வெளிப்படும் எனலாம்.

கல்வி என்பது அறிவு பண்பு புத்துணர்வு அறநெறி மெய்ப்பொருள் உணர்வு ஆகியவற்றை உள்ளடக்கியது எனவே அறிவு திறமை மனம் குணம் முதலியவற்றை வளப்படுத்த வழிப்படுத்த வழிமுறைகளை காட்டும் கருவியை கல்வி கல்வியினை அடைவதற்கான பயிற்று முறை நோக்கங்கள் பிரச்சினைகள் பற்றி ஆய்தலும் கல்வியாகும்

கல்வி அறம் கல்வி அறியாமையைப் போக்கி அறிவை வளர்க்கும் பிற செல்வங்களும் அறிவை மறைத்து அறியாமையை வளர்க்கின்றன. சில நாளில் தோன்றி சில நாள் மட்டுமே இருந்து சில நாளில் மறைந்து போகும் மானிட உடம்பு (Mathivanan, 1978).

எந்தவகையான செல்வத்தை நாம் பெற முயல வேண்டும் என்று திட்டமிட்டு வாழ வேண்டும். என்றும் அழிந்தாலும் தான் அழியாமல் உயிரோடு சேர்ந்து தொடர்ந்து வரும். அளவில்லாத பெருஞ் செல்வத்தை பெற விருப்பம் கொள்ள வேண்டும்

முத்து சிப்பியில் உள்ள முத்தின் ஒளியும் பாசி மூடிய பவளத்தின் நிறமும் மேகத்தில் மறைந்து இருக்கும் நிலவின் முகம் போல நம்மை மூடிக் கொண்டிருக்கும் அறியாமை என்னும் இருளில்

அகப்பட்டு நம் அறிவை இழந்து அழிந்து போகும் பொருள்களில் பெரிதும் மதித்து தேடி வருகிறோம் அழகாக தலை வாரி பின்னப்பட்ட கூந்தல் அழகும் வண்ண வண்ண ஆடை அலங்காரமும் மஞ்சள் ஒருவருக்கு அழகு தருவது உள்ளத்தளவில் வானை விட உயர்ந்தவர்களாக நல்லவர்களாய் வாழவேண்டும் நடுநிலை தவறாது வழியில் செலுத்தும் கல்வியே ஒருவருக்கு சிறந்த அழகைத் தரும் அணிகலன் ஆகும் என்பதை நாலடியார் எடுத்துரைக்கிறது கல்வியினால் உயர்வு பெறலாம் என்பதைத் தெளிவாக உணர வைக்கிறது மேலும் வெள்ளத்தால் அழிக்க முடியாது நெருப்பில் வெந்து போகாத அரசர்களால் கைப்பற்றப்பட்டது கொடுக்கக் கொடுக்கக் குறையாதது

தனக்கு ஆடை அணிகலன்கள் முதலியவற்றால் உண்டாகும் ஒரு அழகினை விட மெய் கல்வியால் உண்டாகும் அழகே எல்லாவற்றிலும் சிறந்த அழகு என்பதை,

“குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்

மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து

நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்

கல்வி அழகே அழகு”

தன்னுடைய கூந்தலையும் முகத்தையும் உடலையும் அழகு என நினைப்பது தவறு. உண்மையான அழகு என்பது அழியாத கல்வியே. கல்வி அறியாமையைப் போக்கி அறிவை வளர்ப்பது. அறியாமை இல்லாத வாழ்வுக்குகல்வி அரு மருந்தாக விளங்குவது (Gowmareeswari, 2010).

## முடிவுரை

மனித வாழ்க்கையில் அறம் என்பது அவசியமானது. ஒவ்வொரு தனிமனிதனும் தாம் கடைபிடிக்க வேண்டிய ஒழுகலாறுகள் குறித்துகூறப்பட்டுள்ளது. பெரியோர் வழி வாழ்வது நன்மை பயக்கும். தம் செயல்கள் செய்வதற்கு முன்பு பொறுமை காத்தல் வேண்டும் என்ற பொறுத்தல் சிந்தனையையும் விளக்கியுள்ளது. உயிர்களுக்கு தீங்கு செய்யாது தன்னிடம் இருக்கும் பொருளை பிறரின் வறுமை அறிந்து பொருள் வழங்க வேண்டும் என்ற ஈதல் அறம் கூறப்பட்டுள்ளது. பாகுபாடு எண்ணாது நல்லவர்களோடு நட்பு கொள்ளவேண்டும் என்று சுட்டி நட்பின் வகையைவிளம்பியுள்ளது. உலகில் அழிக்க முடியாத பெரும் செல்வமாக விளங்கும் கல்வியின் மாண்பு பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## References


Chandrasekaran, R. (2008) Tamil Ilakkiyam varalatril aram, Bharathiar University, Coimbatore, India.

Gowmareeswari, S. (2010) Naladiyar Thelivurai, Saradha Pathippagam, Chennai, India.

Iraiyarasan, P. (1977) Tamil Ilakkiya Varalaru, Poombuhar Pathippagam, Chennai, India.

Mathivanan. R. (1978) Thirukkuralil arivuraikal, Jain Youth Forum, Chennai, India.

Subbu Reddyar, N. (1988), Tamil Ilakkiyangalil aram needhimuraimai, Sri Venkateshwara Pathippagam, Chennai, India.

Thirunavukkarasar, (1977) Thirukkural Needhi Ilakkiyam, Madras University, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License